# <u>விருதுநகர் நகராட்சி</u>

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048-ம் சுபகிருது வருடம் ஆவணி மாதம் 14 - ம் நாள் 2022 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **30.08.2022-ம்** தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் இராஜா மாளிகை பெருந்தலைவர் காமராஜர் கூடத்தில் நடைபெறும் அவசர கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள் : 1</u>

விருதுநகர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டிராக்டர் TN 67 A 7229 -க்கு முன்புற டயர் டியூப் 2க்கு -ரூ10,000/- பின்புற டயர் டியூப் 2க்கு - ரூ.36,000/- ஆக மொத்தம் ரூ.46,000/-க்குள் பணி செய்யவும், ஒப்பந்தப்புள்ளி பணி மேற்கொள்ளவும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் : 2183/2022/எச்3
**<u>தீர்மானம் எண்.</u> 132. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 2</u>

விருதுநகர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு குப்பை அள்ளும் பயன்பாட்டிற்காக இயங்கி வரும் TN 67 BA 1600 டாடா ஏசி மினி டிப்பர் வண்டிக்கு புதியது டயர் நான்கு புதியது டியூப் நான்கு வாங்க உத்தேச செலவு ரூ.18,000/-க்கு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது ஒப்பந்தப்புள்ளி பணி மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் : 8644/2022/எச்3
**<u>தீர்மானம் எண்.</u> 133. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 3</u>

விருதுநகர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு குப்பை அள்ளும் பயன்பாட்டிற்காக இயங்கி வரும் TN 67 BA 1600 டாடா ஏசி மினி டிப்பர் வண்டிக்கு 2022-2023ம் ஆண்டிற்கு FC வேலை செய்ய அனைத்து பழுது நீக்கும் பணி செய்ய வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.1,20,000/-க்குள் பணி செய்யவும், ஒப்பந்தப்புள்ளி பணி மேற்கொள்ளவும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் : 8643/2022/எச்3
<u>தீர்மானம் எண்.</u> 134. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 4</u>

விருதுநகர் நகராட்சியில் திரு.வி.மாரியப்பன் என்பவர் தினக்கூலியில் பணியாளராக பணியமர்த்தப்பட்டு, பின்னர் 04.07.2001 முதல் காலமுறை ஊதிய விகிதத்தில் துாய்மை பணியாளராக பணி நிரந்தரம் செய்யப்பட்டு 31.03.2014 அன்று ஒய்வு பெற்றார், அன்னார் பழைய ஒய்வூதியதிட்டத்தின் கீழ் பழைய ஒய்வூதியம் வழங்க கோரி அரசுக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண் W.P.(MD) No17827/2020 (ம) 14857/ 2020ல் வழக்கு தொடரப்பட்டு, மேற்படி வழக்கில் அன்னார்க்கு ஒய்வூதியம் மற்றும் அதற்குரிய பலன்களை வழங்கிட 07.12.2020 அன்று தீர்ப்பானை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்ப்பாணையினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு வழக்கு எண் WA(MD) **203/2022** மற்றும் CMP(MD)**1969/2022** ல் தொடரப்பட்டு **09.03.2022** அன்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது, மேற்படி இரு வழக்குகளிலும் பழைய ஒய்வூதியத்தை வழங்குமாறு தனியருக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. இந்நிலையில் தொடர்புடைய மனுதாரர் திரு.வி.மாரியப்பன் என்பவர் கடந்த 09.12.2021 அன்று காலமாகிவிட்டார்.

இப்பொருள் தொடர்பாக அரசுக்கு எதிராக தீர்ப்பு பெறப்பட்டிருப்பதால் சட்டகருத்துரு பெற்று உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு (SLP) தாக்கல் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் **05.07.2022**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பந்தமாக அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் (AAG), சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை, மதுரை அவர்களின் சட்ட கருத்துரு **14.07.2022**ல் பெறப்பட்டு அதன்படி மேல்முறையீட்டு மனு (SLP) தாக்கல் செய்திட திரு.வி.பாலசந்திரன், உச்சநீதிமன்ற வழக்கறிஞர், புதுடில்லி அவர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, இவ்வழக்கு கட்டணம் கேட்பு அறிவிப்பு எண் VBC/07/2022-23 DATE 30.07.2022 செலவு பட்டியல் தொகை.ரூ.**75,000/**–ம் வழங்கிட கோரப்பட்டுள்ளது. பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

ந.க.எண் எச்1/ 0392/ 2021

அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் வழக்கினை உச்சநீதிமன்றத்தில் விரைவாக தாக்கல் செய்து அதன் அறிக்கையினை அரசுக்கு அனுப்பிட அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.</u> 135. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 5</u>

விருதுநகர் நகராட்சி பகுதியில் உள்ள இராவ் பகதூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளி முன்புறம் உள்ள கடை வரி விதிப்பு எண் : 132200902ற்குரிய கட்டிடம் மிகவும் பழுதடைந்த

நிலையில் உள்ளதால் மேற்படி கடையினை காலி செய்ய கோரி சார்வு செய்யப்பட்ட அறிவிப்பு கடிதம் நாள் : 08.07.2022யை ஆட்சேபித்து சென்னை உயர் நீதி மன்றம் மதுரை கிளையில் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர் திருமதி.செல்வராணி என்பவரால் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.WP (MD) 16191/2022ற்கு வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் என்பவர் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கும், மேற்படி வழக்கிற்கான எதிர்வாதுரை தாக்கல் செய்வதற்கான வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூ.15,000/-க்கும் மேற்படி வழக்கில் எதிர்வரும் காலங்கள் ஏற்படும் உத்தேச செலவுத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி வழக்கின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சம்பந்தப்பட்ட வழக்கறிஞருக்கு வழங்க வேண்டிய வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூ.15,000/-யை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : 0053/2022/அ4

**தீர்மானம் எண். 136. வார்டு எண் 24,31 நகர்மன்ற உறுப்பினர்கள் கோ.ஜெயக்குமார்,சு.சரவணன் ஆட்சேபணை பதிவு செய்யப்பட்டது. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 6

விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான ஆணைக்குட்டம் தலைமை நீரேற்று நிலைய வளாகத்தில் மழையால் சாய்ந்து பழுதான மரங்களை அப்புறப்படுத்தும் பணிக்கும், வனத்துறை அலுவலர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு விலை நிர்ணயம் செய்து கொடுத்துள்ளனர். பொது நிதியில் 2022-2023ம் ஆண்டின் கீழ் ரூ.1300/- மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியை எதிர் நோக்கியும் அவசர அவசியம் கருதியும், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 18.08.2022ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்ததாரர் விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.p.ஜெயக்குமார், த/பெ.பாண்டி 1/சி 6 மாத்துநாயக்கன்பட்டி விருதுநகர் | ரூ1250/- |
| 2. | திரு.மூ.தர்மர், த/பெ முத்தரசன் 5/1062 வெள்ளுர் போஸ்ட் விருதுநகர். | ரூ1300/- |
| 3. | திரு.அ.செல்வம், த/பெ. அழகர்சாமி காந்திபுரம் தெரு விருதுநகர். | ரூ1200/- |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகளில் குறைவாக அளித்துள்ள திரு.மூ.தர்மர், த/பெ முத்தரசன் க.எண் 5/106 வெள்ளூர் போஸ்ட் விருதுநகர். அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : இ2/2671/2022
**<u>தீர்மானம் எண்.</u> 137. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 7</u>

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 ல் மேற்கு பாண்டியன் காலனி மற்றும் வார்டு எண் 5 ல் பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் உள்ள (சமுதாயக் கழிப்பிடம் மற்றும் நம்ம டாய்லெட்) ஆகிய கழிப்பிடங்கள் 23/07/2022 அன்று தல ஆய்வு செய்யப்பட்டதில் கழிப்பிடங்களில் உள்ள தண்ணீர் விநியோகம் செய்யும் குழாய்கள்,கதவுகள், மின்சாதனங்கள், கழிவுநீர் மற்றும் குழாய்கள் மற்றும் இதர சிறு சிறு பழுதுகள் சரிசெய்ய கோரி உள்ளதால் கழிப்பிடங்கள் உரிய முறையில் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. பழுதுகளை சரிசெய்ய பொதுமக்கள் மற்றும் மேற்படி வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் கோரியதையடுத்து உடனடியாக பழுது பார்க்கும் பணிக்கு ரூ.1,30,000/- க்கு மதிப்பீடு தயார் செய்து பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/9045/2022
**<u>தீர்மானம் எண்.</u> 138. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 8</u>

விருதுநகர் நகராட்சியில் 15 வது நிதிக்குழு கட்டிய மானியம் 2021-2022ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட மாத்தநாயக்கன்பட்டி சாலையில் உள்ள உரக்கிடங்கை சுற்றி சுற்றுச்சுவர் மதிப்பீடு தொகை ரூ.57.00/- இலட்சத்திற்கு அமைக்கும் பணி மேற்கொள்ள, அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்தமைக்கு விளம்பரம் கட்டணம் ரூ.4990.00/- யை சம்பந்தப்பட்ட Enthrall Communications Pvt Ltd என்ற நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/5145-3/2021
**<u>தீர்மானம் எண்.</u> 139. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 9</u>

விருதுநகர் நகராட்சியில் நம் நாட்டின் 75 வது சுதந்திர தின விழாவை (15.08.2022) முன்னிட்டு இரண்டு நாட்கள் (14.08.2022 - 15.08.2022 ) அலுவலக பிரதான கட்டிடத்தில் வண்ண சீரியல் விளக்குகளால் ஒளி அமைக்க 280 சீரியல் செட் வாடகைக்கு பொருத்தி எரியச் செய்து கொடுக்கும் பணிக்கு, பொது நிதியில் 2022-2023ம் ஆண்டின் கீழ் ரூ.18000/- மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.11.08.2022ன் படி அவசர அவசியம் கருதி, மேற்காணும் பணிகள் மேற்கொள்ள

12.08.2022 ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்ததாரர் விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | கணேஷ்மூர்த்தி எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் பிளம்பிங் விருதுநகர். | 19600.00 |
| 2. | P.S.R. POWER VIRUDHUNAGAR | 17920.00 |
| 3. | A.சந்திரசேகரன் மின் ஒளி,ஒலி அமைப்பாளர். விருதுநகர். | 20160.00 |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகளில் குறைவாக அளித்துள்ள P.S.R. POWER VIRUDHUNAGAR. அவர்களின் விலைப்புள்ளியினை அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்: இ2/9470/2022

**தீர்மானம் எண். 140. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 10

விருதுநகர் நகராட்சி அலுவலகத்தில் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளை (15.07.2022) முன்னிட்டு 14.07.2022 முதல் 15.07.2022 ஆகிய இரண்டு தினங்கள் சீரியல் செட் 100 எண்ணம் FOCUS LIGHT 30 எண்ணம் வாடகைக்கு பொருத்தி எரியச் செய்து கொடுக்கும் பணியினை குடிநீர் வழங்கல் நிதியில் 2022-2023ம் ஆண்டின் கீழ் ரூ.12000/- மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான நாள்.27.06.2022ன் படி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 07.07.2022 ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்ததாரர் விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | பராசக்தி சவுண்ட் சர்வீஸ் மற்றும் எலக்ட்ரிக்கல்ஸ் விருதுநகர். | 11600 |
| 2. | அன்னம் எண்டர்பிரைசஸ் விருதுநகர். | 11400 |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர் விலைப்புள்ளிகளில் குறைவாக அளித்துள்ள அன்னம் எண்டர்பிரைசஸ் விருதுநகர். அவர்களின் விலைப்புள்ளியினை அவசர

அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : இ2/7426/2022
**தீர்மானம் எண்.** 141. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 11

விருதுநகர் நகராட்சி 2022-23ம் ஆண்டிற்கு சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பின் பணி செய்ய 15.07.2022-ம் தேதியன்று இரு உரை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. தொழில்நுட்ப அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் M/s Mirficial Careers Pvt Ltd. என்ற நிறுவனம் அனைத்து ஆவணங்களும் சரியாக இணைத்துள்ளார் மற்றும் M/s Bharathi Hr consultancy என்ற நிறுவனம் சரியான ஆவணங்கள் செலுத்தாத காரணத்தினால் அவரது ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது. இப்பணி திட்டபணி என்பதால் தகுதி பெற்ற M/s Mirficial Careers Pvt Ltd, என்ற நிறுவனம் ஒரு நபருக்கு ரூ.700 என்ற விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். அதன்படி மேற்படி நிறுவனத்திற்கு விலை குறைப்பு கடிதம் கோரி கடிதம் வைக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் நபர் ஒருவருக்கு ரூ.650/- என விலை குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளது. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளி M/s Mirficial Careers Pvt Ltd. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 05.08.2022 அன்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : எப்1/5608/2022
**தீர்மானம் எண்.** 142. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 12

விருதுநகர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள வாகன எண் TN 67 BJ 1306 க்கு 5 புதிய டயர்கள் வாங்குவதற்கு 2022-2023ம் ஆண்டு வருவாய் மூல நிதியின் கீழ் பணி மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.80,000.00/- க்கு மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ3/9198/2022
**தீர்மானம் எண்.** 143. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 13</u>

இந்நகராட்சி பகுதியில் ஓராண்டில் நடைபெற்ற திட்ட பணிகள் குறித்த அறிக்கையை விளம்பரம் செய்தமைக்கு விளம்பரம் கட்டணம் தொகையினை கீழ்கண்டவாறு வழங்கலாம்.

1. MALAI MURASU தொகை ரூ. 8000/-
2. EVENING TAMILNADU தொகை ரூ.12600/-
3. MAALAI TAMIZHAGAM தொகை ரூ.14700/-

மேற்கண்ட விளம்பரம் கட்டணத் தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/2859/2022
**<u>தீர்மானம் எண்.</u> 144. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 14</u>

விருதுநகர் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் பாதாளச்சாக்கடை அடைப்பு மற்றும் இதர பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகன எண் TN 67 AF 5739 க்கு 2022 - 2023 க்குரிய வாகன தகுதி சான்று மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் ரூ.77000/-க்கு மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.107. நாள்.14.07.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 27.07.2022 ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | R.A.267,SRIVILLIPUTHUR BLOCK AGRO ENGG& SERVICE CO-OP CENTRE LTD, SRIVILLIPUTHUR-25 | ரூ.77,000.00/- |
| 3. | SP.SPL.177, RAJAPALAYAM AGRO ENGINEERING AND SERVICE CO-OP.CENTER LTD., RAJAPALAYAM - 17 | ரூ.83,700.00/- |
| 2. | VETRI AUTO MOBILES ELECTRICAL WORKS, WATER SERVICE E WELDING WORKS. VIRUDHUNAGAR. | ரூ.80,600.00/- |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1ல் உள்ள R.A.267,SRIVILLIPUTHUR BLOCK AGRO ENGG& SERVICE CO-OP CENTRE LTD, SRIVILLIPUTHUR- 25 நிறுவனத்தின் விலைப்புள்ளியினை பாதாள சாக்கடை பணி என்பதால் பொது மக்களின் அவசிய அவசரம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்: இ1/3854/2022

**<u>தீர்மானம் எண்.</u> 145. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 15</u>

விருதுநகர் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் பாதாள சாக்கடை திட்டம் பயன்பாட்டில் உள்ள Jet rod machine 6000 liters கொள்ளளவு கொண்ட வாகன எண் TN 67 AE 3687 க்கு 2022 - 2023 க்குரிய வாகன தகுதி சான்று மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் ரூ.141600/-க்கு மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.106. நாள்.14.07.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 27.07.2022ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | R.A.267,SRIVILLIPUTHUR BLOCK AGRO ENGG& SERVICE CO-OP CENTRE LTD, SRIVILLIPUTHUR-25 | ரூ.1,41,600.00/- |
| 2. | SP.SPL.177, RAJAPALAYAM AGRO ENGINEERING AND SERVICE CO-OP.CENTER LTD., RAJAPALAYAM - 17 | ரூ1,49,742.00/- |
| 3. | VETRI AUTO MOBILES ELECTRICAL WORKS, WATER SERVICE E WELDING WORKS. VIRUDHUNAGAR. | ரூ1,45,671.00/- |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1ல் உள்ள R.A.267,SRIVILLIPUTHUR BLOCK AGRO ENGG& SERVICE CO-OP CENTRE LTD, SRIVILLIPUTHUR- 25 நிறுவனத்தின்

விலைப்புள்ளியினை பாதாள சாக்கடை பணி என்பதால் பொது மக்களின் அவசிய அவசரம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்: இ1/3853/2022

**<u>தீர்மானம் எண்.</u> 146. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 16</u>

விருதுநகர் நகராட்சியின் 15 வது மத்திய நிதிக்குழு ஆணையம் நிதி 2021-2022ம் ஆண்டின் கீழ் கட்டிய மானியத்தில் (15 CFC Tied Grant) இந்நகராட்சிக்குட்பட்ட மாத்துநாயக்கன்பட்டி சாலையில் உள்ள உரக்கிடங்கை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு, ரூ.57.00/- இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.1135. நாள்.31.12.2021ன் படி அனுமதி அளித்துள்ளது, அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 28.07.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.கு.மாரியப்பன்,அன்கோ விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.004 சதவிகிதம் குறைவு. |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு ஏற்கனவே 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற நிலையில் திட்டப்பணி என்பதால் அவசியத்தை முன்னிட்டு தற்போது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.004% குறைவாக அளித்துள்ள **திரு.கு.மாரியப்பன், அன்கோ, விருதுநகர்.** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : இ1/5145-3/2021.

**<u>தீர்மானம் எண்.</u> 147. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 17

விருதுநகர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஆணையாளர் வாகனம் TN 67 BJ 1306 க்கு புதிய டயர்கள் 5 எண்ணம் வாங்குவதற்கு வருவாய் மூலநிதி 2022-2023ம் ஆண்டின் கீழ் வருவாய் மூல நிதியின் கீழ் ரூ.80000.00/- மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 11.08.2022ன் படி பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 17.08.2022ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.வரப்பெற்ற மூன்று விலப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்ததாரர் விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | M/S. Zenith Tyres, Virudhunagar | 77,500/- |
| 2 | M/S. Nandha Tyres, Virudhunagar | 74,500/- |
| 3 | M/S. City tyres,sathur road, Sivakasi | 79,500/- |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக அளித்துள்ள அவர்களின் விலைப்புள்ளியினை அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்:இ3/9198/2022

**தீர்மானம் எண். 148. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 18

இந்நகராட்சி வருவாய் மூலதனநிதி 2020-2021ம் ஆண்டின் கீழ் Sewage treatment plantல் மின்னனு தொடர் கண்காணிப்பு அமைப்பை மதிப்பீடு தொகை ரூ.33.00 இலட்சத்திற்கு நிறுவும் பணி (installation of online) மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்தமைக்கு விளம்பரம் கட்டணம் ரூ.6703/-யை சம்பந்தப்பட்ட The Daily Thanthi என்ற நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 5727/2021/சி1

**தீர்மானம் எண். 149. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 19

இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2021-22ன் கீழ் வார்டு எண்.14 சத்திய மூர்த்தி சாலையில் 24.00இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்தமைக்கு விளம்பரம் கட்டணம் ரூ.17,816/-யை சம்பந்தப்பட்ட Express publications Madurai Private LTD என்ற நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 150. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 20

இந்நகராட்சி வருவாய் மூலதனநிதி 2020-2021ம் ஆண்டின் கீழ் Sewage Treatment plant ல் மின்னனு தொடர் கண்காணிப்பு அமைப்பை ரூ.33.00 இலட்சத்தில் நிறுவும் பணிக்கு ( Installation of online) நகர் மன்ற தீர்மானம் எண் 1140, நாள் 31.12.2021ல் அனுமதி அளித்ததின் பேரில் 30.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ் கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ் கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | R.L.Technology Pvt LTD, Chennai – 24 | மதிப்பீட்டை காட்டிலும் 6.89 சதவிகிதம் அதிகம் |
| 2 | Swaraj Wquipment Pvt LTD, Chennai 78 | மதிப்பீட்டைக்காட்டிலும் 6.89 சதவிகிதம் அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் R.L.Technology (P) LTD Chennai – 24 ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைக்காட்டிலும் 6.89 கூடுதலாக அளித்ததின் அடிப்படையில் இவ்வலுவலக ந.க.எண் இ1/5727/2022 நாள் : 11.06.2022ல் விலை குறைப்பு கடிதம் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் மதிப்பீட்டை விட 0.017 சதவிகிதம் குறைப்பு செய்து தனது 11.06.2022 விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும், குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலும், மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: இ1/5727/2021

**தீர்மானம் எண். 151. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 21

இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் பொது பிரிவு , பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த ஜெராக்ஸ் மிஷின்கள் 3 எண்ணம் மிகவும் பழுதடைந்து நகல்

ஏதும் எடுப்பதற்கு இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி ஜெராக்ஸ் மிஷின்களை பழுது நீக்கம் செய்து டிரம்கள் மாற்றம் செய்வதற்கு 1.6.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | Soody Electronnics, Madurai | 27800/- |
| 2 | Shar Computer System , Madurai | 31350/- |
| 3 | R.P.Technology, Madurai | 31700/- |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் ஏற்கனவே நகராட்சியில் ஜெராக்ஸ் மிஷின் ஆண்டு பராமரிப்பு பணி (A.M.C) மேற்கொண்டு வரும் Soody Electronics, Madurai என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளி தொகை ரூ.27800/- கொடுத்துள்ளதால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்கலாம்.மேற்படி தொகையினை பொது நிதியின் கீழ் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : 4351/2021/இ1

<u>தீர்மானம் எண்.</u> 152. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள்</u> : 22

இந்நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 15ல் நமக்கு நாமே திட்டம் 2021-22ன் கீழ் தேசபந்து மைதானம் மாரியம்மன் கோவில் அருகில் உள்ள உயர் மின் கோபுர விளக்குகள் மதிப்பீடு ரூ.395000/-ல் ( ரூபாய் மூன்று இலட்சத்து தொன்னூற்று ஐந்து இலட்சம் ) பழுது நீக்கி பராமரிப்பு செய்யும் பணிக்கு 08.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சௌந்திரபாண்டியன் நகராட்சி ஒப்பந்ததாரர் விருதுநகர் | 0.05 சதவிகிதம் மதிப்பீட்டின் விலையை விட குறைவு |
| 2 | திரு.அன்னம் எண்டர்பிரைசஸ் நகராட்சி ஒப்பந்ததாரர் விருதுநகர் | 14.65 சதவிகிதம் மதிப்பீட்டின் விலையை விட அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை காட்டிலும் 0.05 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள சௌந்திரபாண்டியன் விருதுநகர் நகராட்சி ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி திட்ட பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 153. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 23

இந்நகராட்சியில் 1 முதல் 36 வார்டுகளில் தெருக்களில் சுற்றிதிரியும் நாய்களால் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள், குழந்தைகள் சாலைகளில் இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் அனைவருக்கும் மற்றும் போக்குவரத்திற்க்கும் இடையூராக ஏற்படுத்துவதாகவும் நாளிதழ்கள் செய்தி மற்றும் தொடர் புகார்கள் வரப்பெற்றுள்ளது.

எனவே பொது சுகாதார அவசியம் கருதி அச்சுறுத்தும் வகையில் சுற்றித்திரியும் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்திட ரேபிஸ் தடுப்பூசி செலுத்திட வேண்டியுள்ளதாலும் , கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும், தெருநாய்கள் தோரயமாக 500 எண்ணிக்கை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது, அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.3,50,000/– (மூன்று இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) ஆகும், பொது நிதியில் இருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 154. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 24

விருதுநகர் நகராட்சியில் பொது சுகாதாரம், கொரோனா தடுப்பு பணிக்கென, சிறப்பு மெகா தடுப்பு ஊசி முகாம் மூலம் பொதுமக்களுக்கு தடுப்பு ஊசி செலுத்திட நாள் 07–08–2022ல்– 15 (முகாம்) மற்றும் 21.08.202ல் அமைக்கப்பட்டு காலை 7.00 மணியிலிருந்து மாலை 7.00 மணி வரை பணி மேற்கொள்ளப்பட்டுள்ள அதன் களப்பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி மாலை சாப்பாடு கீழ் கண்ட நாட்களில் வழங்கப்பட்டுள்ளது அதற்கான செலவினம் தொகை கீழ் கண்ட விவரப்படி விருதுநகர் ஜெயமணி ஹோட்டல் உரிமையாளருக்கு வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | விநியோகம் செய்யப்பட்ட உணவு வகைகள் விவரம் | நபர்கள் விவரம் | பில் நாள் | தொகை ரூபாய் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | காலை டிபன், டீ, வடை, மதிய உணவு, மற்றும் மாலை டீ, வடை, இரு வேளை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்) | 130 | 08.08.2022 | 18772.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | காலை டிபன், டீ, வடை, மதிய உணவு, மற்றும் மாலை டீ, வடை, இரு வேளை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்) | 130 | 23.08.2022 | 18772.00 |

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்05.08.2022 மற்றும் 18.08.2022ல் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.4518/2021/எச்1

**தீர்மானம் எண்.** 155. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 25

விருதுநகர் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு தூய்மைப் பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் டாடா ஏசி மின் லாரி எண் TN 67 BA 1600 க்கு ஆண்டு பழுது நீக்கம் பராமரிப்பு பணி தகுதி சான்று பெற பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 18.07.2022 ல் அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 25.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்ததாரர் விபரம் | விலை விகிதம் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.ஸ்ரீராம் மெசீன் லேத் ஒர்க்ஸ் அனட் சப்ளையர்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர் | ரூ.116702/– |
| 2 | திரு. வெற்றி ஆட்டோ மொபைல்ஸ், விருதுநகர் | ரூ.125434/– |

அலுவலக குறிப்பு.

அ) பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் , பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கான் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1ல் உள்ள திரு.ஸ்ரீராம் மெசீன் லேத் ஒர்க்ஸ் அனட் சப்ளையர்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் : எச்3/8643/2022

**தீர்மானம் எண்.** 156. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 26

விருதுநகர் நகராட்சியின் பொது சுகாதராப்பிரிவு தூய்மைப் பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் டிராக்டர் எண் TN 67 AF 7229 க்கு புதியதாக டயர்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 18.07.2022 ல் அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 25.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்ததாரர் விபரம் | விலை விகிதம் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு. பாபு டயர்ஸ், விருதுநகர் | ரூ.47200/– |
| 2 | திரு. ஜெனித் டயர்ஸ், விருதுநகர் | ரூ.53000/– |

அலுவலக குறிப்பு.

அ) பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் , பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கான் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1ல் உள்ள பாபு டயர்ஸ் ,விருதுநகர் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் : எச்3/2183/2022

**தீர்மானம் எண். 157. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 27

விருதுநகர் நகராட்சியின் பொது சுகாதராப்பிரிவு தூய்மைப் பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் டாடா ஏசி மின் லாரி எண் TN 67 BA 1600 க்கு புதியதாக டயர்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 18.07.2022 ல் அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 25.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்ததாரர் விபரம் | விலை விகிதம்<br>தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு. பாபு டயர்ஸ், விருதுநகர் | ரூ.17600/– |
| 2 | திரு. ஜெனித் டயர்ஸ், விருதுநகர் | ரூ.18000/– |

<u>அலுவலக குறிப்பு.</u>

அ) பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் , பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கான் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1ல் உள்ள பாபு டயர்ஸ் ,விருதுநகர் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் : எச்3/8644/2022
**<u>தீர்மானம் எண்.</u> 158. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 28</u>

விருதநகர் நகராட்சியின் வருவாய் பிரிவு சொத்து வரி பொது சீராய்வு சிறப்பு கேட்பு அறிவிப்புகள் 36 வார்டு பகுதிகளில் உள்ள கட்டிடங்கள் மற்றும் காலியிட வரிவிதிப்புதாரர்களுக்கு அச்சிட்டு வழங்க அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.1,00,000/- ( ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆகும் மேற்காண் பணியினை பொது நிதியின் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்: 1732/2022/அ1
**<u>தீர்மானம் எண்.</u> 159. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 29</u>

விருதுநகர் நகராட்சி பகுதிகளில் வார்டு எண்1 முதல் 36 வரை உள்ள பாதாளசாக்கடை மேன் ஹோல் உடைந்து சாலையில் பொதுமக்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இடங்களில் புதிதாக மேன் ஹோல் மூடிகள் வாங்கி பழுது பணிகள் செய்வதற்கு ரூ.5.00/- இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை 2022-2023 குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்றத் தீர்மான எண்.109 நாள்.14.07.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில்

மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 26.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.தனம் கண்ஸ்ட்ரக்ஷன் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.029 சதவிகிதம் குறைவு. |
| 2. | திரு.K.சௌந்திரபாண்டியன் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.78 சதவிகிதம் அதிகம். |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.029% குறைவாக அளித்துள்ள திரு.தனம் கண்ஸ்ட்ரக்ஷன் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண் : இ2/7857/2022

**தீர்மானம் எண். 160. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 30

விருதுநகர் நகராட்சி பகுதிகளில் வார்டு எண்1 முதல் 36 வரை உள்ள பாதாளசாக்கடை மற்றும் குடிநீர் மராமத்து பராமரிப்பு பணிகளால் சேதமடைந்த பேவர்பிளாக் சாலை சீர்செய்யும் பணிக்கு ரூ.5.00/- இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை 2022-2023 பொது நிதியில் மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்றத் தீர்மான எண்.36 நாள்.29.04.2022 ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 24.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.தனம் கண்ஸ்ட்ரக்ஷன் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.95 சதவிகிதம் அதிகம். |
| 2. | திரு.அன்னம் எண்டர்பிரைசஸ் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.52 சதவிகிதம் குறைவு. |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.52% குறைவாக அளித்துள்ள திரு.அன்னம் எண்டர்பிரைசஸ் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண் : இ1/2225/2022
**தீர்மானம் எண்.** 161. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 31

விருதுநகர் நகராட்சி பகுதிகளில் வார்டு எண்1 முதல் 36 வரை உள்ள பாதாளசாக்கடை மற்றும் குடிநீர் மராமத்து பராமரிப்பு பணிகளால் சேதமடைந்த சிமெண்டு சாலைகளை சீர்செய்யும் பணிக்கு ரூ.500000/- இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை 2022-2023 பொது நிதியில் மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்றத் தீர்மான எண்.37 நாள்.29.04.2022 ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 24.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.அன்னம் எண்டர்பிரைசஸ் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.14 சதவிகிதம் குறைவு. |
| 2. | திரு.தனம் கண்ஸ்ட்ரக்ஷன் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.21 சதவிகிதம் அதிகம். |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.14% குறைவாக அளித்துள்ள திரு.அன்னம் எண்டர்பிரைசஸ் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண்: இ1/2226/2022
**தீர்மானம் எண்.** 162. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 32

விருதுநகர் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண் 35, சிவந்திபுரம் 13 வது தெருவில் உள்ள பேவர்பிளாக் சாலை மற்றும் மழை நீர் வடிகால் மராமத்து பணிக்கு ரூ.2.05 இலட்சம் மதிப்பீடு செலவினங்களை 2022-2023 பொது நிதியில் மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்றத்தீர்மான எண்.98 நாள்.14.07.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 26.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, அன்றைய

தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/S.தனம் கன்ஸ்ட்ரக்ஷன் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.93 சதவிகிதம் அதிகம். |
| 2. | M/S.அன்னம் எண்டர்பிரைசஸ் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.29 சதவிகிதம் குறைவு. |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.29% குறைவாக அளித்துள்ள M/S.அன்னம் எண்டர்பிரைசஸ் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண் : இ1/3695/2022

**<u>தீர்மானம் எண்.</u> 163. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 33</u>

விருதுநகர் நகராட்சி 20.07.2022 அன்று விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், ஆகியோர்களின் முன்னிலையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில்,விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, 03.05.1992 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து செயல்படாமல் உள்ளது. அவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். எனவும் அதற்கு முன்னேற்பாடாக, புதிய பேருந்து நிலையத்தினை துாய்மை செய்து பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பறைகள், செப்டிக் டேங்க், மின் வசதிகள், குடிநீர் வசதிகள், வண்ணம் பூசுதல் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். அதன்படி புதிய பேருந்து நிலைய மராமத்து பணிகள் செய்ய மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சம் 2022-2023 பொதுநிதியில் இருந்து பணிகள் மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்றத் தீர்மான எண்.127 நாள்.29.07.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 24.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.P.சக்கரையம்மாள் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.51 சதவிகிதம் குறைவு. |
| 2. | திருவாளர்கள்.தனம் கன்ஸ்ட்ரக்ஷன் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 4.07 சதவிகிதம் அதிகம். |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.51% குறைவாக அளித்துள்ள் திருமதி.P.சக்கரையம்மாள் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண் : இ1/8995/2022
<u>தீர்மானம் எண்.</u> 164. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் : 34</u>

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 ல் மேற்கு பாண்டியன் காலனி மற்றும் வார்டு எண் 5 ல் பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் உள்ள (சமூதாயக் கழிப்பிடம் மற்றும் நம்ம டாய்லெட்) ஆகிய கழிப்பிடங்கள் 23/07/2022 அன்று தல ஆய்வு செய்யப்பட்டதில் கழிப்பிடங்களில் உள்ள தண்ணீர் விநியோகம் செய்யும் குழாய்கள்,கதவுகள், மின்சாதனங்கள், கழிவுநீர் மற்றும் குழாய்கள் மற்றும் இதர சிறு சிறு பழுதுகள் சரிசெய்ய கோரி உள்ளதால் கழிப்பிடங்கள் உரிய முறையில் பயன்படுத்த இயலாத சூழ் நிலை உள்ளது. பழுதுகளை சரிசெய்ய பொதுமக்கள் மற்றும் மேற்படி வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் கோரியதையடுத்து உடனடியாக பழுது பார்க்கும் பணிக்கு ரூ.1.30 இலட்சம் மதிப்பீடு செலவினங்களை 2022-2023 பொது நிதியில் மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.27.07.2022 ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 26.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.என்.பாண்டியராஜன், விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.27 சதவிகிதம் குறைவு. |
| 2. | திரு. ஜீ.செல்வேந்திரன், விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 18.36 சதவிகிதம் அதிகம். |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.27% குறைவாக அளித்துள்ள திரு.என்.பாண்டியராஜன் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண்: இ1/9045/2022
<u>தீர்மானம் எண்.</u> 165. **மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 35

விருதுநகர் நகராட்சிக்கு செந்தமான ஆணைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையத்தில் சாலைகள் முழுவதும் பழுது அடைந்துள்ளதை சீர் செய்யும் பணிக்கு ரூ.5.45/- இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை 2022-2023 பொது நிதியில் மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்றத் தீர்மான எண்.78 நாள்.30.06.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 26.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.K.G. இராஜகுரு விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 1.64 சதவிகிதம் அதிகம். |
| 2. | திரு.D. சிவக்குமார் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04 சதவிகிதம் குறைவு. |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.04% குறைவாக அளித்துள்ள திரு.D.சிவக்குமார் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண்: இ1/1139-6/2022

**தீர்மானம் எண். 166. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 36

விருதுநகர் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண் 1ல் ஆயம்மாள் நகர் முனியாண்டி கோவில் தெரு பகுதியில் போர்வெல் அமைத்து மின்மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் அமைக்கும் பணிக்கு ரூ.3.20 இலட்சம் மதிப்பீடு செலவினங்களை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-2022 ஆண்டு நிதியில் மேற்கொள்வதற்கு, மாவட்ட ஆட்சியரின் ந.க.சி3/5991/2021 நாள்.12.05.2022 ன் செயல்முறை ஆணை படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 23.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.G.மனோஜ்பாஸ்கர் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 1.13 சதவிகிதம் அதிகம். |
| 2. | திரு.எம்.கார்த்திகேயன் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02 சதவிகிதம் குறைவு. |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.02% குறைவாக அளித்துள்ள திரு.எம்.கார்த்திகேயன் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண்: இ1/3262/2022

**தீர்மானம் எண். 167. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 37

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 25ல் ஷத்திரிய பெண்கள் மேல் நிலைப்பள்ளி அருகில் (உள்ள கழிப்பறையை இடித்து விட்டு)ரேசன் கடை அமைக்கும் பணிக்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பீடு செலவினங்களை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-2022 ஆண்டு நிதியில் மேற்கொள்வதற்கு, மாவட்ட ஆட்சியரின் ந.க.சி3/5991/2021 நாள்.06.07.2022 ன் செயல்முறை ஆணை படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 12.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/S.தனம் கன்ஸ்ட்ரக்ஷன் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.004 சதவிகிதம் குறைவு. |
| 2. | திரு.G.மாரியப்பன் அன்கோ, விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 6.18 சதவிகிதம் அதிகம். |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.004% குறைவாக அளித்துள்ள M/S.தனம் கன்ஸ்ட்ரக்ஷன் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண் : இ1/1139-6/2022

**தீர்மானம் எண். 168. மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 38

விருதுநகர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண் 23 பர்மா காலனி 7 வது தெருவில் கடைசி பகுதியில் உள்ள சுற்றுச் சுவரினை இடித்து விட்டு புதியதாக சுற்றுச் சுவர் கட்டு பணிக்கு ரூ.500000/- இலட்சம் மதிப்பீடு செலவினங்களை பொது நிதியில் மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்றத்தீர்மான எண்.99 நாள்.14.07.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 26.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.G.மனோஜ்பாஸ்கர் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 7.19 சதவிகிதம் அதிகம். |
| 2. | திரு.எம்.கார்த்திகேயன் விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.12 சதவிகிதம் குறைவு. |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.12% குறைவாக அளித்துள்ள திரு.எம்.கார்த்திகேயன் விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

ந.க.எண்: இ1/3695-3/2022

**தீர்மானம் எண்.** 169. மன்றம் அனுமதிக்கப்பட்டது சுற்றுச்சுவர் என்பது தடுப்புச்சுவர் என திருத்தம் செய்யப்பட்டது.

நகர்மன்றத்தலைவர்
விருதுநகர் நகராட்சி